செய்தி வெளியீட்டு எண்.25 நாள்.14.02.2024

**செய்தி வெளியீடு**

**<u>மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்குவதற்கான முகாம்கள்</u>**

தமிழ்நாடு அரசு மற்றும் வங்கிகள் இணைந்து தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து மாவட்டங்களிலும் மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் கல்விக்கடன் வழங்குவதற்கான முகாம்கள் நடத்தி வருகின்றனர்.

இதனை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் வரும் **பிப்ரவரி 15ஆம் தேதி வியாழக்கிழமை** அன்று சென்னை நந்தனம் Y.M.C.A கல்லூரியில் மாபெரும் கல்விக்கடனுக்கான சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. கல்விக்கடன் விண்ணப்பம் மற்றும் அதற்கு தேவையான வருமான சான்றிதழ், பான்கார்டு விண்ணப்பம் இ சேவை மையம் மூலம் இந்த முகாமில் பதிவு செய்யலாம். இந்த முகாமில் அனைத்து மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டு பயனடையுமாறு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சென்னை–01.